தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **A.P.No.** | **:** | 01/2024 | சாட்சியம் | **:** | **PW2** |
| **Name** | **:** | திரு.N.தீனதயாளன் | | | |
| **Date** | **:** | **06.04.2026** | | | |
| **Time** | **:** | **12.52 p.m to 1.40 p.m** | | | |

ம.சா.**2.N.தீனதயாளன்** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

18.12.2023ல் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். DGM ஆக வேலைக்கு சேர்ந்தேன். இப்போதும் அதே பதவியில் தான் உள்ளேன். எதிர்மனுதாரரை நான் வேலைக்கு சேர்ந்த பின்னர் பார்த்து இருக்கிறேன். நான் வேலைக்கு சேர்ந்த பின்னர் குற்றச்சாட்டு அடிப்படையில் எதிர் மனுதாரர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்று தெரிந்து கொண்டேன். 23.11.2020ல் எதிர்மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்றால் ஆமாம். நான் வேலைக்கு சேருவதற்கு முன்னரே எதிர்மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் எனக்கு வழக்கு விவரம் மற்றும் உள் துறை விசாரணை பற்றி தெரியாது என்றால் ஆமாம். ஆனால் அது

சம்மந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேன். ம.சா.ஆ.19,20 உள் விசாரணையின் போது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். உள் துறை விசாரணை தாமதப்படுத்தப்பட்ட காரணத்தினால் அவருக்கு முழுமையான பிழைப்பூதியம் வழங்கப்பட்டது என காட்ட மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சான்றிட்ட நிலையாணை முன்னிலைக்கு தான் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது என்றால் ஆமாம். சான்றிட்ட நிலையாணை முன்னிலைக்கு தான் பணி நீக்கம் செய்யப்பட்டார், உள் விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். சான்றிட்ட நிலையாணை முன்னிலைக்கு தான் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக விசாரணை அதிகாரி சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். சான்றிட்ட நிலையாணை உள் விசாரணையின் போது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். தற்காலிக பணி நீக்க உத்தரவு மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணையும் ஒன்றாக கொடுக்க முடியுமா என்றால் முடியும். ம.சா.ஆ.4 ல் அனைத்து 7 புகார்களும் இணைக்கப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த புகார் கடிதங்கள் இணைத்து அனுப்பப்பட்டதா என்றால் தெரியாது. உள் விசாரணையின் போது தான்

அந்த கடிதங்கள் தாக்கல் செய்யப்பட்டன என்றால் இருக்கலாம். புகார் கடித நகல் அவரிடம் கொடுத்து விளக்கம் கேட்கப்பட்டு இருக்க வேண்டுமென்றாலும் அவ்வாறு கொடுக்காத காரணத்தினால் விசாரணை இயற்கை நீதிக்கு புறம்பானது என்றால் சரி. 10.06.2019 அன்று C shift ல் நடந்ததாக கூறப்படும் சம்பவத்திற்காக 03.07.2019 தேதியிட்ட புகார் அளித்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 10.06.2019 தேதியில் நடந்ததாக கூறப்படும் சம்பவத்திற்காக தான் 01.08.2019 தேதியில் தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். குற்றச்சாட்டு குறிப்பாணையில் குற்ற செய்கை நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். வழக்கு விவரம் எதுவும் முழுவதும் தெரியாத காரணத்தினாலும், உள்துறை விசாரணையில் சாட்சியாக இல்லாத காரணத்தினாலும் என்னுடைய சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 27.08.2020 அன்று நடைபெற்ற உள் விசாரணையின் போது தொழிலாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடிதம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். மேற்கூறிய கடிதத்தை விசாரணை

அதிகாரி பரிசீலனை செய்ததாக அதில் குறிப்பிடவில்லை. விசாரணை அன்று முழுமையாக முடிக்கப்பட்டதாக பதிவு செய்த பிறகு இந்த கடிதத்தை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். 31.08.2020 அன்று விசாரணை மீள் திறப்பு செய்ய மனு கொடுத்தார் என்றால் ஆமாம். 22.10.2020 தேதியிட்ட ம.சா.ஆ.11 மூலம் விசாரணை அதிகாரி பதில் கொடுத்தார் என்றால் ஆமாம்.ம.சா.ஆ.12 விசாரணை முடிவறிக்கையில் அது தொழிலாளிக்கு தபாலில் அனுப்பப்பட்டதற்கான சான்று அது 02.11.2020 அன்று அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். விசாரணை முடிவறிக்கை நிர்வாகத்திற்கு 19.09.2020 அன்று அளிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த அறிக்கையில் 24.09.2020 தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 22.10.2020 ல் தொழிலாளி உள்துறை விசாரணை மறுதிறப்பு செய்ய வைத்த கோரிக்கைக்கு பதில் அளித்து விசாரணை அதிகாரி வழங்கிய கடிதத்திற்கு முன்பாகவே விசாரணை அதிகாரி நிர்வாகத்திடம் விசாரணை முடிவறிக்கையை அளித்துவிட்டார் என்றால் ஆமாம். விசாரணை மீள் திறப்பு செய்ய வைத்த கோரிக்கையை பரிசிலீக்காமல் விசாரணையை

முடித்தது இயற்கை நீதிக்கு முரணானது என்றால் தவறு. கொரோனா காலக்கட்டம் என்பதால் உள் துறை விசாரணையை வீடியோ கான்ப்ரன்ஸ் மூலமாக நடத்தாமல் நேரடியாக நடத்த கோரிக்கை வைத்ததை பரிசீலனை செய்யாமல் ஒருதலைபட்சமாக விசாரணையை முடித்தது நியாயம் இல்லை என்றால் தவறு. விசாரணையின் போது தொழிலாளிக்கு போதிய வாய்ப்பு கொடுக்காமல் விசாரணையை இயற்கை நீதிக்கு முரணாக, ஒருதலைபட்சமாக விசாரணையை முடித்தது நியாயம் அல்ல. அதனால் விசாரணை செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

எதிர்மனுதாரரின் 27.08.2020 தேதியிட்ட கடிதத்தை தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.21

**குறுக்கு விசாரணை**

அந்த கடிதத்தில் நிர்வாகத்தரப்பு 2 ம் சாட்சி திரு.தினேஷ் பாபு அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கேட்டுள்ளார் என்றால் ஆமாம். வாய்ப்பு கொடுக்கப்படாமல் விசாரணை முடிக்கப்பட்டது என்றால் ஆமாம்.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.04.2026.